இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in

murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 84 – ஒலி : 246 – திருவள்ளுவர் ஆண்டு 2057 – சித்திரை 04 – வெள்ளிக்கிழமை 17 ஏப்ரல் 2026 – திருச்சி ★★ 12 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 84 - Issue 246 : Thiruvalluvar Year - 2057 - Chithirai 04 - Friday 17 April 2026 - Trichy ★★ 12 Pages ₹ 5.00



கழகத் தலைவரும் தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள், நேற்று (16.4.2026) ஒன்றிய பா.ஜ.க. அரசு நாடாளுமன்றத்தில் தொகுதி மறுவரையறை தொடர்பாக கொண்டுவரப்படும் சட்டத் திருத்தத்திற்கு எதிர்ப்பை தெரிவித்து கருப்புக் கொடி ஏற்றிவைத்தார் உடன். அமைச்சர் மா.மதிவேந்தன், நாமக்கல் கிழக்கு மாவட்ட கழகச் செயலாளர் ராஜேஷ்குமார், நாமக்கல் சட்டமன்ற தொகுதி கழக வேட்பாளர் திருமதி. இராணி, சட்டமன்ற உறுப்பினர் ராமலிங்கம் ஆகியோர் உள்ளனர்.



கழகத் தலைவரும் தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள், நேற்று (16.4.2026) ஒன்றிய பா.ஜ.க. அரசு நாடாளுமன்றத்தில் தொகுதி மறுவரையறை தொடர்பாக கொண்டுவரப்படும் சட்டத் திருத்தத்திற்கு எதிர்ப்பை தெரிவித்து கருப்புச் சட்டத்தின் நகலை எரித்தார். உடன், அமைச்சர் மா.மதிவேந்தன், நாமக்கல் கிழக்கு மாவட்ட கழகச் செயலாளர் ராஜேஷ்குமார், நாமக்கல் சட்டமன்ற தொகுதி கழக வேட்பாளர் திருமதி ப.இராணி, சட்டமன்ற உறுப்பினர் ராமலிங்கம் ஆகியோர் உள்ளனர்.

### தொகுதி மறுவரையறை : வீடெங்கும் கருப்புக்கொடிகள், தெருவெங்கும் கோலங்கள், கருப்புக் கொடிகள்!

# தமிழ்நாடே கொந்தளிப்பு - கருங்கடலானது!

## நாமக்கல்லில் கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின், கருப்புக்கொடி ஏற்றி சட்ட நகலை எரித்தார்!

**சென்னை, ஏப். 17 -**

**தொகுதி மறுவரையறை என்ற பெயரில் தமிழ்நாடு உள்ளிட்ட தென் மாநிலங்களைப் பழிவாங்கும் ஒன்றிய பா.ஜ.க.வைக் கண்டித்து தமிழ்நாடெங்கும் வீடுகள், தெருக்கள் தோறும் கருப்புக் கொடி ஏற்றப்பட்டது. நாமக்கல்லில் தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்டிருந்த கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அங்கு கழக முன்னோடியின் இல்லத்தில் கருப்புக் கொடி ஏற்றி முழக்கமிட்டார்.**

கழகத் தலைவரும் - முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள், தொகுதி மறுவரையறைக்கு எதிரான கருப்புக்கொடிப் போராட்டத்துக்கு அழைப்பு விடுத்து நேற்று முன்தினம் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில் Delimitation என்ற பெயரில், தனது லிமிட்டைத் தாண்டி, பா.ஜ.க. அரசு, தமிழ்நாடு உள்ளிட்ட தென் மாநிலங்களை வஞ்சிக்கிறது!

வடமாநிலங்களுக்கு அரசியல் வலிமையை மேலும் வாரி வழங்குவது போன்றோ, தென் மாநிலங்கள் அரசியல் வலிமையை இழப்பது போன்றோ நடந்தால், “தமிழ்நாடு பார்த்துக் கொண்டு சும்மா இருக்காது, ஒவ்வொரு குடும்பமும் தெருவுக்கு வந்து போராடும்” என்று சொல்லி இருந்தேன். யார் நல்லது சொன்னாலும் கேட்காத ஒன்றிய பா.ஜ.க. அரசு, இதையும் கேட்கவில்லை.

நாடாளுமன்றத்தில் அவர்கள் கொண்டு வரப் போகும் சட்டத் திருத்தத்திற்கு எதிர்ப்பைக் காட்டும் வகையில், தமிழ்நாட்டில் அனைவரும் நம்முடைய வீட்டில் கருப்புக் கொடியை ஏற்றுவோம். கருப்புச் சட்டத்தை எதிர்த்து நம் எதிர்ப்பின் அடையாளமாக, கருப்புக் கொடியை ஏற்றுவோம். இந்தியாவை இருண்ட காலத்துக்கு அழைத்துக் கொண்டு எதேச்சாதிகார பா.ஜ.க. அரசுக்கு எதிராக கருப்புக் கொடி ஏற்றுவோம்” என்று பதிவிட்டிருந்தார்.

மேலும் தமிழ்நாடு முதலமைச்சராக இருக்கும் என்னுடைய தலைமையிலேயே மிகப்பெரிய போராட்டம் நடத்துவோம் என்று கழகத் தலைவர், முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலை தளப் பதிவில் வெளியிட்டிருந்தார்.

தொகுதி மறுவரையறைக்கு எதிராகத் தமிழ்நாடு முழுவதும் வீடுகளிலும், பொது இடங்களிலும் கருப்புக் கொடி ஏற்றும் போராட்டம் 16.4.2026 அன்று நடைபெறும். என்று அறிவித்திருந்தார்.

தமிழ்நாட்டின் குரலை மதித்து ஒன்றிய அரசு பின்வாங்கவில்லை என்றால், அதற்கான விளைவுகளை நீங்கள் சந்திக்க வேண்டி இருக்கும். இதற்காக, மிகப் பெரிய விலையை நீங்கள் கொடுக்க வேண்டி இருக்கும்!

தி.மு.க. தலைவராக, அனைத்துக்கும் மேல் சுயமரியாதையுள்ள தமிழனாக மீண்டும் எச்சரிக்கிறேன்! என்றும் பதிவிட்டிருந்தார்.

இந்நிலையில் தமிழ்நாடெங்கும் தொகுதி மறுவரையறைக்கு எதிராக வீடுகளில் பொது இடங்களில் கருப்புக் கொடியேற்றி கோலமிடப்பட்டது.

### நாமக்கல்லில் முதல்வர் கருப்புக் கொடியேற்றினார்!

இந்நிலையில் நாமக்கல்லில் நேற்று மாலை நாமக்கல் சேலம் சாலையில் உள்ள பொம்மைக் குட்டைமேடு பகுதியில் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து தேர்தல் பரப்புரை பொதுக்கூட்டம் நடைபெற்றது. இந்த மாபெரும் பொதுக்கூட்டத்தில் கலந்து கொள்ள கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் இரவு நாமக்கல் வருகை தந்தார்.

அப்போது நேற்று (16.04.2026 வியாழக்கிழமை காலை தொகுதி மறுவரையறையை எதிர்த்து ஒன்றிய அரசைக் கண்டித்து நாமக்கல் மேற்கு நகர கழக அவைத் தலைவர் எம்.கே.செல்லப்பன் அவர்களின் வீட்டின் முன்பு அமைக்கப்பட்டிருந்த கொடிக்கம்பத்தில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கருப்பு சட்டை அணிந்து கருப்புக் கொடி ஏற்றினார்.

கருப்பு சட்டை அணிந்து கருப்புக் கொடி ஏற்றிய முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மசோதா நகலை எரித்து ‘பறிக்காதே.. பறிக்காதே.. மாநில உரிமைகளை பறிக்காதே..’ என கண்டன முழக்கம் எழுப்பினார்.

தொடர்ந்து மக்கள் தொகை அடிப்படையிலான தொகுதி மறுவரையறை மசோதா நகலை எரித்தார் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள்.

## தமிழ்நாடெங்கும் எதிர்ப்புத் தீ பரவட்டும்!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் வேண்டுகோள்!

**சென்னை, ஏப். 17-**

**ஒன்றிய பா.ஜ.க. அரசின் தென் மாநிலங்களைப் பழிவாங்கும் ‘தொகுதி மறுவரையறை’ குறித்து கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், நேற்று காலை வெளியிட்டவலைதளப்பதிவில் 'தமிழ்நாடெங்கும் எதிர்ப்புத் தீ பரவட்டும்' என்று குறிப்பிட்டுள்ளார்.**

இதுகுறித்து கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

Delimitation: தமிழ்நாடெங்கும் எதிர்ப்புத் தீ பரவட்டும்!

பாசிச பா.ஜ.க.வின் ஆணவம் வீழட்டும்!

அன்று, தமிழ்நாட்டில் பற்றத் தொடங்கிய இந்தி எதிர்ப்புத் தீ டெல்லியைச் சுட்டெரித்தது. டெல்லி பணிந்த பின்பே எங்கள் தீ தணிந்தது!

இன்று, தமிழரைச் சொந்த நாட்டில் அகதிகளாக்கும் கருப்புச் சட்டத்தின் நகலை எரித்து மற்றுமொரு தீயினைப் பற்ற வைத்திருக்கிறேன்.

இத்தீயும் திராவிட நாடெங்கும் பரவும். பா.ஜ.க.வின் ஆணவத்தை அடக்கிக் காட்டும்.

"தமிழ் எங்கள் பிறவிக்குத் தாய்
இன்பத் தமிழ் எங்கள் வளமிக்க உளமுற்ற தீ!"

இவ்வாறு கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.